**DEPOSITION OF WITNESS**

**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.286/**2022**
Preliminary Register :
Sessions :

Deposition of Witness for Prosecution : PW1
Defendant :
Court :

Name : விக்னேஸ்வரன்
Father' s Name : சசிக்குமார்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

20.07.2026 CC No.286/2022 அ.சா.1 விக்னேஸ்வரன்

( 2வது எதிரி ஆஜர். 1 வது எதிரி இறந்துவிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் அகரம்காலனி, திருப்புவனம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் GK என்ற தனியார் நிறுவனத்தில் HRஆக பணி செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 4 தனலெட்சுமி எனது தங்கை உறவு ஆவார். ஆஜர் எதிரி விஜயராஜன் எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரியுடன் நான் சமாதானமாக செல்கிறேன். சுமார் 07 வருடங்களுக்கு முன்பு காலை 11.30 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு இருந்தபோது யாரோ சில நபர்கள் என்னைப் பார்த்து அசிங்கமாக பேசி உனது தங்கை வாழ்க்கை முடிச்சிரும்டா என மீண்டும் அசிங்கமாக பேசி என்னை கை, கால்களால் மாறி மாறி அடித்தும் மிதித்தும் உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தார்கள். கூட்டமாக அவர்கள் இருந்ததால் அவர்கள் குறிப்பிட்டு யார் என்று எனக்கு

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.07.20 14:21:13 +0530

தெரியவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் இந்த எதிரிகள் மீது நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதாக சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 01.11.2019ம் தேதியன்று காலை 09.30 மணியளவில் பட்டியல் சாட்சி 4 தனலெட்சுமியிடம் இந்த வழக்கு எதிரிகள் பாலியல் விருப்பத்தை தெரிவித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்றும் அதை தனலெட்சுமி என்னிடம் வந்து கூறியதால் நான் எதிரி கருப்பசாமியை கண்டித்தேன் என்றும் அதை மனதில் வைத்து 02.11.2019ம் தேதியன்று காலை 11.30 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு இருந்தபோது எதிரிகள் என்னைப் பார்த்து அசிங்கமாக பேசி என்னைக் கீழே தள்ளிவிட்டு கையால் அடித்தும் காலால் மிதித்தும் என்னைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் நான் கொடுத்த புகாரிலும் எனது போலீஸார் விசாரணையிலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.20 14:21:21 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.